Q.C. 84

# DEPARTMENTAL EXAMINATIONS (COMPUTER BASED TEST)

| | | |
|---|---|---|
| **Name of the Test:** | Survey Department Test – Draughtsman Test – Paper – I (Without Books) | 003 |

Maximum Time: 2.30 Hour

Maximum Marks: 100

## ***IMPORTANT INSTRUCTIONS***

## OBJECTIVE TYPE

கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்கத் தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளைக் கவனமாகப் படிக்கவும்.

1. This computer based Test contains 100 number of questions in objective Type.
   இந்தக் கணினி வழித் தேர்வானது, 100 கொள்குறி வகையிலான வினாக்களைக் கொண்டது.
2. Answer all questions. Each question carries one mark
   அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் ஒவ்வொரு வினாவும் ஒரு மதிப்பெண் உடையது.
3. In case of doubt, English version is the Final.
   வினாக்களில் சந்தேகம் இருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.
4. Words of masculine gender in these questions shall, where the context so require, be taken to include feminine gender.
   இந்த வினாக்களில் இடம் பெற்றுள்ள ஆண் பாலினத்தவரின் வார்த்தைகளில் தேவைப்படின், சூழலுக்கேற்ப பெண் பாலினத்தவரின் வார்த்தைகளும் அடங்கும்.
5. Before answering the questions in CBT, candidates should read the following instructions displayed in the monitor:
   விண்ணப்பதாரர்கள் கணினி வழித் தேர்விற்கு விடையளிக்கத் தொடங்கும் முன் கணினியின் திரையில் தோன்றும் அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்.

**a)** One question will be displayed on the screen at a time.
ஒரே நேரத்தில் ஒரு வினா மட்டுமே கணினித் திரையில் தோன்றும்.

**b)** Time available for you to complete the examination will be displayed through a countdown timer in the top right-hand corner of the screen. It will display

Q.C T.C
084 - 003

2 01.09.2021

Survey - Draughtsman test
Paper - I

1. The block wood on cross staff measures about ————.
நேர் கோணக்கட்டையில் உள்ள மரகட்டையின் அளவு ————.

(A) 12 cm square
12 செ.மீ. சதுரம்

(B) 10 cm square
10 செ.மீ. சதுரம்

(C) 14 cm square
14 செ.மீ. சதுரம்

(D) 20 cm square
20 செ.மீ. சதுரம்

2. Details like area, classification, wet, dry, poramboke of the entire village is recorded, survey numbers wise in this———— register.
புல எண் வாரியாக கிராமத்தின் மொத்த பரப்பு நஞ்சை, புஞ்சை, புறம்போக்கு, முதலிய விவரங்கள் பதியப்பட்டிருக்கும் பதிவேடு ————.

(A) A Register
அ பதிவேடு

(B) Chitta
சிட்டா

(C) Village map
கிராம வரைபடம்

(D) Land register
நிலப்பதிவேடு

3. If the angle between the two lines are greater than 90 degree then the angle is called as
இரண்டு கோடுகளுக்கு இடைப்பட்ட கோணம் 90 டிகிரிக்கு மேல் இருந்தால் அது ———— எனப்படும்.

(A) Horizontal angle
கிடைமட்ட கோணம்

(B) Right angle
செங்கோணம்

(C) Acute angle
குறுங்கோணம்

(D) Obtuse angle
விரிகோணம்

4. New subdivisions and new subdivision changes in urban area will be carried out in the survey records by
நகர புறங்களில் புதிய உட்பிரிவு மற்றும் புதிய உட்பிரிவு மாறுதல்கள் நில அளவை ஆவணங்களில் ———— மூலம் மாறுதல் மேற்கொள்ளப்படுகிறது.

(A) Town sub inspector of survey
நகர சார் ஆய்வாளர்

(B) Senior Draftsman
முதுநிலை வரைவாளர்

(C) Head Draftsman
தலைமை வரைவாளர்

(D) Deputy Tahsildar
துணை வட்டாட்சியர்

5. If the angle between the two lines is less than 90 degree then the angle is called
இரண்டு கோடுகளுக்கு இடைப்பட்ட கோணம் 90 டிகிரிக்கு குறைவாக இருந்தால் அது ———————— எனப்படும்.

(A) Obtuse angle
விரிகோணம்

(B) Right angle
செங்கோணம்

(C) Acute angle
குறுங்கோணம்

(D) Horizontal angle
கிடைமட்ட கோணம்

6. The instrument used to measure cutting points and offsets in a straight line known as
ஒரு நேர்கோட்டில் வெட்டளவு மற்றும் குத்தளவுகள் எடுக்க பயன்படுத்தும் கருவி

(A) Compass
காம்பஸ்

(B) Protractor
கோணமானி

(C) Cross staff
நேர்கோணக்கட்டை

(D) Flag
கொடி

7. Who will do technical scrutiny in the Taluk offices regarding subdivision files?
வட்டாட்சியர் அலுவலகத்தில் உட்பிரிவு மனுக்களை ———————— ரால் தொழில்நுட்ப கூறாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

(A) Senior Draftsman
முதுநிலை வரைவாளர்

(B) Head Draftsman
தலைமை வரைவாளர்

(C) Manager Technical
தொழில்நுட்ப மேலாளர்

(D) Land Records Draftsman
வட்ட ஆவண வரைவாளர்

8. In traverse plotting under metric conversion a full sheet will contain
மெட்ரிக் மாற்றத்தின் கீழ் டிராவர்ஸ் வரைவு செய்யும் போது ஒரு முழு தாள் ———————— கொண்டிருக்கும்.

(A) 50 squares
50 சதுரங்கள்

(B) 20 squares
20 சதுரங்கள்

(C) 100 squares
100 சதுரங்கள்

(D) 75 squares
75 சதுரங்கள்

9. An ———— is a bend or corner formed by two straight lines meeting each other.
இரண்டு நேர்கோடுகள் ஒன்றுக்கொன்று சந்திப்பதால் உருவாக்கப்பட்ட வளைவு அல்லது மூலையானது

(A) Angle
கோணம்

(B) Distance
தூரம்

(C) Bearing
பேரிங்

(D) Point
புள்ளி

10. Printing and publication of village maps are done in
———— அலுவலகத்தில் கிராம வரைபடங்கள் அச்சிட்டு வெளியீடல் பணி மேற்கொள்ளப்படுகிறது

(A) National informatic centre
தேசிய தகவல் மையம்

(B) Central survey office
மத்திய நில அளவை அலுவலகம்

(C) Survey of India
சர்வே ஆப் இந்தியா

(D) Government of Tamilnadu
தமிழ்நாடு அரசு

11. Parallel ruler usually in use is ——— long
பொதுவாக பயன்படுத்தப்படும் பேரலல் ரூலர் ———— அளவு ஆகும்.

(A) 10 centimeters
10 சென்டிமீட்டர்

(B) 15 centimeters
15 சென்டிமீட்டர்

(C) 20 centimeters
20 சென்டிமீட்டர்

(D) 25 centimeters
25 சென்டிமீட்டர்

12. ——— are placed at the end of G lines which do not coincide with the field tri junction.
புல முச்சந்தி அல்லாத மற்ற ஜி லைன் சேரும் முனைகளில் ———— நடப்படுகின்றன.

(A) Field stones
புல எல்லை கற்கள்

(B) Kandam stone
கண்டம் கற்கள்

(C) Bi junction stone
பை ஜங்சன் கற்கள்

(D) Tri junction stone
டிரை ஜங்சன் கற்கள்

13. A portion of a land acquired under the land acquisition act for a street, is sold by the ———— to a private person.
நில எடுப்பு சட்ட பிரிவின் கீழ் தெருவிற்காக கையகப்படுத்தப்படும் ஒரு நிலத்தின் பகுதியை ———— ஆல் தனி நபருக்கு விற்கப்படும்.

(A) Secretary
செயலாளரால்

(B) Municipal council
நகராட்சி மன்றத்தால்

(C) Chairman
தலைவரால்

(D) Assistant
உதவியாளரால்

14. ———— symbol will be scripted on top of the stones buried in poramboke bends of village boundary.
கிராம எல்லையில் வரும் புறம்போக்கு வளைவுகளில் நடப்படும் கற்களின் தலைப்பகுதியில் ———— என்ற அடையாளம் குறிக்கப்பட்டிருக்கும்.

(A) St. George's cross
செயிண்ட் ஜார்ஜ் கிராஸ்

(B) St. George's minus
செயிண்ட் ஜார்ஜ் மைநஸ்

(C) x
x

(D) S
S

15. ———— stone are the marks set up at village tri junctions.
கற்கள் கிராம முச்சந்தியில் நடப்படுகிறது.

(A) Second class
இரண்டாம் வகை

(B) Fourth class
நான்காம் வகை

(C) First class
முதல் வகை

(D) Third class
மூன்றாம் வகை

16. Offset pole is generally ———— in length.
ஆப்செட் போல் பொதுவாக ———— நீளம் கொண்டது.

(A) 4 metres
4 மீட்டர்

(B) 6 metres
6 மீட்டர்

(C) 2 metres
2 மீட்டர்

(D) 5 metres
5 மீட்டர்

17. In taluk account Maintenance, the register of encroachments on government and city corporation public lands are entered in ————.
வட்ட கணக்கு பராமரிப்பில், அரசு மற்றும் நகராட்சி பொது நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகள் ———— பதிவு செய்யப்படுகிறது.

(A) Register no.12 (Form No.40)
பதிவேடு எண். 12 (படிவம் எண். 40)

(B) Register no.13 (Form No.41)
பதிவேடு எண். 13 (படிவம் எண். 41)

(C) Register no.3 (Form No.14)
பதிவேடு எண். 3 (படிவம் எண். 14)

(D) Register no.11 (Form No.24)
பதிவேடு எண். 11 (படிவம் எண். 24)

18. Each chain is provided with 10 arrows made of stout iron wire about ——— in length.
ஒவ்வொரு சங்கிலிக்கும் ———— நீளம் கொண்ட ஒரு மொத்தமான இரும்பு கம்பிமூலம் 10 அம்புகள் வழங்கப்படுகிறது.

(A) 30 cm
30 செ.மீ.

(B) 100 cm
100 செ.மீ.

(C) 50 cm
50 செ.மீ.

(D) 200 cm
200 செ.மீ.

19. The stone register should be prepared after the stone have been numbered in the ———— maps.
———— வரைபடங்களில் கற்களுக்கு வரிசை எண்கள் வழங்கப்பட்ட பிறகு மட்டுமே கல் பதிவேடு தயாரிக்கப்பட வேண்டும்

(A) Village
கிராம

(B) Taluk
வட்ட

(C) Block
பிளாக்

(D) District
மாவட்ட

20. 20 metre chain comprising of 100 links each link denotes
100 இணைப்புகள் கொண்ட 20 மீட்டர் சங்கிலியில் ஒவ்வொரு இணைப்பும் ———— மீட்டர் குறிக்கிறது

(A) 0.1 metre
0.1 மீட்டர்

(B) 0.4 metre
0.4 மீட்டர்

(C) 0.3 metre
0.3 மீட்டர்

(D) 0.2 metre
0.2 மீட்டர்

21. The imaginary lines drawn round the earth and passing through the poles are called ________.

பூமியை சுற்றி துருவங்களின் வழியாக செல்லும்படி வரையப்படும் கற்பனை கோட்டிற்கு ________ என்று பெயர்.

(A) Declination
டெக்கிலிநேஷன்

(B) Meridians
மெரிடியன்ஸ்

(C) The zenith
வானுச்ச புள்ளி

(D) Equator
பூமத்தியரேகை

22. In 8A the incorporation of changes in the village set of records should be done only after getting sanction orders by ________.

________ உத்தரவு பெற்ற பின்னரே (8A) கிராம கணக்குகளின் உட்பிரிவு மாறுதல் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(A) Assistant
உதவியாளர்

(B) Field Assistant
புல உதவியாளர்

(C) Tahsildar
வட்டாட்சியர்

(D) Deputy Tahsildar
துணை வட்டாட்சியர்

23. In Simple triangulation method the ________ is the only instrument required.

சாதாரண முக்கோண முறையில் பயன்படுத்தப்படும் ஒரே கருவி

(A) Chain
சங்கிலி

(B) Rod
கம்பம்

(C) Stick
குச்சி

(D) Arrow
குத்தூசி

24. In survey boundaries act of 1923 which act gives the rights to survey officer to carry out the survey in the prescribed manner.

நில அளவை எல்லை சட்டம் 1923 சட்டத்தில் நில அளவை பணிகளை செய்யும் அதிகாரம் அளிக்கும் சட்ட பிரிவு எது?

(A) Section 5
சட்டபிரிவு 5

(B) Section 6
சட்டபிரிவு 6

(C) Section 7
சட்டபிரிவு 7

(D) Section 8(1)
சட்டபிரிவு 8(1)

25. ———— is the area tolerance limit for area correction.
பரப்பு திருத்தத்திற்கு அதிகபட்ச வரம்பு

(A) 2%
(B) 3%
(C) 5%
(D) 4%

26. In taluk office, copy application register is maintained by ————
வட்டாட்சியர் அலுவலகத்தில் நகல் மனு பதிவேடு யாரால் பராமரிக்கப்படுகிறது?

(A) Senior Draftsman
முதுநிலை வரைவாளர்
(B) Land Records Draftsman
நில ஆவண வரைவாளர்
(C) Surveyor
நில அளவர்
(D) Taluk Deputy surveyor
வட்ட சார் ஆய்வாளர்

27. ———— is the process of dividing a piece of land into triangles.
ஒரு பகுதி நிலத்தை முக்கோணமாக உட்பிரிவு மேற்கொள்ள ———— முறை பயன்படுத்தப்படுகிறது.

(A) Mapping
மேப்பிங்
(B) Traverse
டிராவர்ஸ்
(C) Triangulation
சாதாரண முக்கோணம்
(D) Ranging
ரேஞ்சிங்

28. The straight line joining the opposite angles of a quadrilateral is called as ————.
ஒரு நாற்கரத்தின் எதிரெதிர் கோணங்களில் சேரும் நேர் கோடு ———— என்று அழைக்கப்படுகிறது.

(A) Hypotenuse
கர்ணம்
(B) Side
பக்கம்
(C) Diagonal
மூலைவிட்டம்
(D) Perpendicular
செங்குத்து

29. In ———— method the diagonal line should not cross each other.
———— முறையில் ஜி கோடுகள் ஒன்றுக்கு மேல் ஒன்று செல்லக்கூடாது.

(A) Diagonal and Offset
மூலைவிட்ட மற்றும் குத்தளவு முறை
(B) Triangulation
சாதாரண முக்கோண முறை
(C) Ranging
ரேஞ்சிங்
(D) Traverse
டிராவர்ஸ்

30. In town villages the actual area of the subdivision and of the whole field will be computed by the ————.
நகர்ப்புற கிராமங்களில் உள்ள உட்பிரிவு மற்றும் முழு புலத்தின் உண்மையான பரப்பு ———————— கணக்கிடப்படுகிறது.

(A) Tahsildar
வட்டாட்சியரால்

(B) Zonal Tahsildar
மண்டல துணை வட்டாட்சியரால்

(C) Town sub inspector of survey
நிலஅளவை நகர சார் ஆய்வாளரால்

(D) Revenue Inspector
வருவாய் ஆய்வாளரால்

31. The process of finishing village map and computing its area is called ————.
கிராமப்படம் வரைந்து முடித்து பரப்பு கணிக்கும் முறைக்கு ———————— என்று பெயர்.

(A) "A" process
"A" பணி

(B) "B" process
"B" பணி

(C) "H" process
"H" பணி

(D) "F" process
"F" பணி

32. "A register of Government and municipal lands should be maintained in ————.
அரசு மற்றும் நகராட்சி பகுதிகளின் "அ" பதிவேடு ————————ல் பராமரிக்கப்படுகிறது.

(A) Form-I
படிவம்-I

(B) Form-IV
படிவம்-IV

(C) Form-II
படிவம்-II

(D) Form-V
படிவம்-V

33. For formation of new survey field the extend of area adopted for wet land is ————
நில அளவை புலங்கள் புதியதாக அமைக்கும்போது புஞ்சை நிலத்தில் நிர்ணயிக்கப்பட்ட பரப்பளவு வரம்பு எவ்வளவு?

(A) 2 Hectares
2 ஹெக்டேர்

(B) 100 Hectares
100 ஹெக்டேர்

(C) 25 Hectares
25 ஹெக்டேர்

(D) 50 Hectares
50 ஹெக்டேர்

34. In Diagonal and offset method ———— are used.
மூலைவிட்ட முக்கோண முறையில் ———— பயன்படுத்தப்படுகிறது.

(A) Chain alone
சங்கிலி மட்டும்

(B) Cross-staff alone
நேர் கோணக்கட்டை மட்டும்

(C) Arrows
குத்தூசி

(D) Chain and cross-staff
சங்கிலி மற்றும் நேர் கோணக்கட்டை

35. The ———— is a plane cutting the celestial sphere at 90 degree from the zenith.
வானுச்ச புள்ளியிலிருந்து 90 டிகிரி வானியியல் கோளத்தை வெட்டுகிற கோட்டுக்கு ———— என்று பெயர்.

(A) Celestical
வானியல்

(B) Horizon
வான விளிம்பு

(C) Quadrilateral
நாற்கரமாக

(D) Latitude
அட்சரேகை

36. A four sided figure with different side measurements and different angles are called as
வெவ்வேறு பக்க அளவீடுகள் மற்றும் வெவ்வேறு கோணங்களைக் கொண்ட நான்கு பக்க உருவங்கள் ———— என அழைக்கப்படுகிறது.

(A) Trapeziem
டிரப்பிசியம்

(B) Square
சதுரம்

(C) Quadrilateral
நாற்கரம்

(D) Rectangle
செவ்வகம்

37. By using this option the user can drag the text in the tippan to the desired position.
———— முறையை பயன்படுத்தி புல எல்லை கோடுகள் மற்றும் உட்பிரிவு கோடுகளின் அளவுகளை எங்கு வேண்டுமோ அங்கு கொண்டு செல்லாம்.

(A) Move Text
மூவ் டெக்ஸ்ட்

(B) Move Right
மூவ் ரயிட்

(C) Move Image
மூவ் இமேஜ்

(D) Move Row
மூவ் ரோ

38. The ———— is responsible for the maintenance of all theodolite and chain survey stations in urban areas.
நகர பகுதிகளில் உள்ள அனைத்து தியோடலைட் மற்றும் சங்கிலி நிலையங்கள் பராமரிப்பதற்கு பொறுப்பு அலுவலர் ஆவார்.

(A) Senior Draftsman
முதுநிலை வரைவாளர்

(B) Assistant Director
உதவி இயக்குநர்

(C) Inspector
ஆய்வாளர்

(D) Town Sub Inspector of Survey
நகர சார் ஆய்வாளர்

39. Bearing Means
பேரீங் என்பது

(A) Greenwitch Time
கீரின்விச் டைம்

(B) Angle of Station
எங்கீல் ஆப் எ ஸ்டேசன்

(C) Traverse Line
டிராவர்ஸ் லைன்

(D) True North of a Station
நிலையத்தின் உண்மையான வடக்கு

40. When changes are made in traverse, angles and distance or when fresh traverse are rune for any reason, the work should be checked by the
ஏதேனும் காரணங்களுக்காக டிராவர்ஸ் கோணங்கள் மற்றும் அளவுகள், அல்லது புதிதாக டிராவர்ஸ் கணக்கிடப்படும் போது ஏற்படும் மாற்றங்கள் ———— ஆல் சரிபார்க்கப்பட வேண்டும்.

(A) Deputy Inspector of survey
வட்டத்துணை ஆய்வாளர்

(B) Zonal Tahsildar
மண்டல துணை வட்டாட்சியர்

(C) Tahsildar
வட்டாட்சியர்

(D) Senior Draftsman
முதுநிலை வரைவாளர்

41. 1 Square kilometer
1 சதுர கிலோமீட்டர்

(A) 10 Hectares
10 ஹெக்டேர்

(B) 20 Hectares
20 ஹெக்டேர்

(C) 100 Hectares
100 ஹெக்டேர்

(D) 50 Hectares
50 ஹெக்டேர்

42. The collabland software is developed under ———— platform.
கொலாப்லேண்ட் மென்பொருள் ———————— மேடையில் அமைக்கப்பட்டது.

(A) Foxpro
பாக்ஸ்ப்ரோ

(B) Visual basic
விசுவல் பேசிக்

(C) Oracle
ஆரக்கில்

(D) Java
ஜாவா

43. The subdivision in a field should be numbered from ————.
ஒரு புலத்தில் ஏற்படும் உட்பிரிவுகள் ———————— பகுதியிலிருந்து வரிசைப்படுத்தப்பட வேண்டும்.

(A) North-West to South- East
வடமேற்கிலிருந்து தென் கிழக்கு

(B) West
மேற்கு

(C) South
தெற்கு

(D) North-East to South-West
வடகிழக்கிலிருந்து தென்மேற்கு

44. The ———— is a great circle formed in celestial sphere by the extension of the meridian plane.
பூமியில் மெரிடியனை நீட்டுவதால் வானியல் கோளத்தில் உருவாக்கப்படும் ஒரு பெரு வட்டத்திற்கு ———————— என்று பெயர்.

(A) Celestial meridian
வானியல் மெரிடியன்

(B) Zenith
வானுச்ச புள்ளி

(C) Horizon
வான விளிம்பு

(D) Celestial sphere
வானியன் கோளம்

45. After serving 9(2) notices to pattadhars, objections if any regarding piece of land should be given with in a period of ————.
9(2) அறிவிப்பு வழங்கப்பட்ட நாளிலிருந்து ———————— நிலத்தில் வேறுபாடுகள் இருப்பின் பட்டாதாரர்கள் ஆட்சேபணை மனு வழங்கலாம்.

(A) 1 Month
1 மாதத்திற்குள்

(B) 6 Month
6 மாதத்திற்குள்

(C) 12 Month
12 மாதத்திற்குள்

(D) 3 Month
3 மாதத்திற்குள்

46. A line is a figure bounded by ——— arcs of circles.
ஒரு வட்டம் ஒரு வட்டாரத்தின் ——————— வட்டாரங்களாக வரையப்பட்ட ஒரு உருவமாகும்.

(A) 1
(B) 2
(C) 3
(D) 4

47. Angle for a straight line is ———.
ஒரு படுக்கை கோட்டை வரைந்தால் உண்டாகும் கோணம்

(A) 90°
(B) 180°
(C) 360°
(D) 270°

48. The traverse of Khandam circuits will be set up in ————
கண்டம் சுற்றில் உள்ள டிராவர்ஸ் ——————— பதியப்படுகிறது.

(A) Form No.7.
படிவம் எண்.7.
(B) Form No.8.
படிவம் எண்.8.
(C) Form No.9.
படிவம் எண்.9.
(D) Form No.20.
படிவம் எண்.20.

49. In 'A' register column (3) lands solely owned by the government are symbolically written as ———
"அ" பதிவேட்டில் களம் 3ல் அடையாள பூர்வமாக அரசாங்க நிலங்கள் என்பதை ——————— என குறிக்கப்பட்டிருக்கும்.

(A) H
(B) F
(C) G
(D) E

50. In collabland software which option will be used to create a thatched house in the tippan.
கொலாப்லேன்ட் மென்பொருள் பயன்படுத்துபவர் எந்த கட்டளை உதவியுடன் வரைபடத்தில் கூரைவீடு வரைவு செய்ய முடியும்

(A) Insert
இன்சர்ட்
(B) Paste
பேஸ்ட்
(C) Symbol
சிம்பல்
(D) Copy
காப்பி

51. In maintenance work the maximum tolerance limit allowed for measurement error is ——— for a distance of 5 chains.
பராமரிப்பு பணியில் ஐந்து சங்கிலி தூரத்திற்கு அதிகபட்ச அளவு பிழையின் உச்ச வரம்பு ——————— என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

(A) 2 links
2 லிங்ஸ்

(B) 15 links
15 லிங்ஸ்

(C) 5 links
5 லிங்ஸ்

(D) 4 links
4 லிங்ஸ்

52. ——— should be added to the apparent altitude in order to obtain the true altitude.
உண்மையான ஆல்டிடியூட் (Altitude) அறிய அபெரென்ட் ஆல்டிடியூட் (apparent altitude) உடன் ——————— சை பெருக்க வேண்டும்.

(A) Refraction
ரெப்ரேக்ஷன்

(B) Parallax
பேரலாக்ஸ்

(C) Mean Observed Altitude
மீன் அப்சர்வுடு ஆல்ட்டிடியூடு

(D) Declination
டெக்லினேஷன்

53. Town survey register that deals with encroachments are maintained in ———.
நகரப்புற பதிவேட்டில் ஆக்கிரமிப்புகள் ——————— ல் பராமரிக்கப்படுகிறது.

(A) Form No. IV
படிவம் எண். IV

(B) Form No. V
படிவம் எண். V

(C) Form No. VI
படிவம் எண். VI

(D) Form No. VIII
படிவம் எண். VIII

54. The most accurate method of refixing a missing field trijunction is by ———.
காணாமல் போன புல முச்சந்தி கற்களை மிகவும் துல்லியமான முறையில் புதுப்பிப்பதற்கு ——————— முறை கணக்கீடு பயன்படுத்தப்படுகிறது.

(A) FMS
FMS

(B) NOS
NOS

(C) NPD
NPD

(D) Simple triangulation method
சாதாரண முக்கோணமுறை

55. ——— is the point in the celestial sphere vertically above the observers position.
கணிப்பவர் நிலைக்கு நேர் மேலே வானியல் கோளத்தில் உள்ள புள்ளிக்கு ——————— என்று பெயர்.

(A) Declination
டெக்கிலிநேசன்

(B) Meridian
மெரிடியன்

(C) The Zenith
வானுச்ச புள்ளி

(D) Equator
பூமத்தியரேகை

56. The permanent village register, with survey field number details in 12 columns is called as
சர்வே புல எண் வாரியாக விபரங்கள் 12 பத்திகள் கொண்ட நிலையான கிராம பதிவேடு எது?

(A) A Register
அ பதிவேடு

(B) Chitta
சிட்டா

(C) Village map
கிராம வரைபடம்

(D) Land register
நிலப்பதிவேடு

57. Measurement of angles and distances from one theodolite station to another is called as ————.
ஒரு தியோடலைட் நிலையத்திலிருந்து இன்னொரு நிலையத்தின் கோணம் மற்றும் தூரங்களை அளவீடு செய்ய ——————— என்று அழைக்கப்படும்.

(A) Rectangular co-ordinates
செங்கோண அச்சுதூரங்கள்

(B) Traverse
டிராவர்ஸ்

(C) Perpendicular
செங்குத்து

(D) Meridian
மெரிடியன்

58. In traverse plotting the stations are examined and inked ———.
டிராவர்ஸ் வரைவு செய்யும் போது நிலையங்களை ஆய்வு செய்து ——————— நிறத்தினால் மையிட வேண்டும்.

(A) Blue
நீலம்

(B) Red
சிவப்பு

(C) Black
கருப்பு

(D) Green
பச்சை

59. In urban areas the town sub inspector of survey should maintain two registers in ——— prescribed.
நகராட்சி பகுதிகளில், நகர சார் ஆய்வாளரால் பராமரிக்கப்பட வேண்டிய இரண்டு பதிவேடுகள்

(A) "Form 'C' and Form D"
"படிவம் 'C' மற்றும் படிவம் D"

(B) "Form 'A' and Form B"
"படிவம் 'A' மற்றும் படிவம்B"

(C) "Form 'E' and Form F"
"படிவம் 'E' மற்றும் படிவம் F"

(D) "Form 'G' and Form H"
"படிவம் 'G' மற்றும் படிவம் H"

60. When a survey has been ordered, the 6(1) notification should be affixed in ——— of the village.
புதிதாக நிலஅளவை ஆணையிட்ட பின் அந்த கிராமத்தில் உள்ள ——————— பகுதிகளில், 6(1) விளம்பரம் ஒட்டப்பட வேண்டும்.

(A) Houses
வீட்டு

(B) Chavadi
சாவடி

(C) Schools
பள்ளி

(D) Play ground
விளையாட்டு மைதானத்தின்

61. ———— of survey and Boundary act 1923 is the appeal against the orders under section 9 or 10.
மேற்கண்ட பிரிவு 9 அல்லது 10ன்படி அறிவிக்கப்பட்ட முடிவுகள் மீது யாருக்கேனும் பாதிப்பு ஏற்பட்டால் சம்பந்தப்பட்ட மேல்முறையீட்டு அலுவலருக்கு ——————— நிலஅளவை எல்லை சட்டம் 1923ன் கீழ் மேல்முறையீடு செய்து கொள்ளலாம்.

(A) Section 4(1)
பிரிவு 4(1)

(B) Section 6(1)
பிரிவு 6(1)

(C) Section 11(1)
பிரிவு 11(1)

(D) Section 10(1)
பிரிவு 10(1)

62. ——————— option is used to change the direction of the tippan.
வரைவு செய்யப்பட்ட வரைபடத்தை தேவையான கோணத்திற்கு திருப்பிக் கொள்ள ——————— என்ற கட்டளையை பயன்படுத்தப்பட வேண்டும்.

(A) Undo
அண்டூ

(B) Redo
ரிடூ

(C) Rotate
ரொட்டேட்

(D) Auto fit
ஆட்டோ பிட்

63. Survey errors are classified into ——— types.
நிலஅளவை பிழைகள் எத்தனை வகை உள்ளது?

(A) 1
(B) 2
(C) 8
(D) 3

64. The length of the chain with 150 links is ———
150 இணைப்புகள் கொண்ட சங்கிலியின் நீளம்

(A) 50 metre
50 மீட்டர்
(B) 70 metre
70 மீட்டர்
(C) 30 metre
30 மீட்டர்
(D) 80 metre
80 மீட்டர்

65. Long narrow fields such as street and road should have a length of ————.
தெரு மற்றும் சாலைகள் போன்ற நீண்ட குறுகிய புலங்கள் ————— இருக்க வேண்டும்.

(A) 100 m
100 மீ
(B) 300 m
300 மீ
(C) 200 m
200 மீ
(D) 400 m
400 மீ

66. The formula used to check the value of measured angles in a closed circuit is ———.
சுற்றுப்புலங்களின் கொடுக்கப்பட்ட கோண அளவுகளின் கூடுதல் சரியாக உள்ளதா என கண்டறிய உதவும் சூத்திரம்

(A) $2n \times 90$
(B) $(2n + 4) \times 90$
(C) $(2n - 4) \times 90$
(D) 2n

67. ————— will be used for calculating area in F.M.B
எப்.எம்.பி யில் பரப்பு கணிக்க ————— பயன்படுத்தப்படுகிறது.

(A) Ruled paper
ரூல்டு பேப்பர்
(B) Unruled sheet
அன்ரூல்டு பேப்பர்
(C) Rectangular paper
ரெக்டேங்குலர் பேப்பர்
(D) Area square paper
ஏரியா ஸ்கொயர் பேப்பர்

68. In Taluk Office permanent registers regarding survey will be kept under the control of ————.

வட்ட அலுவலகத்தில் நிலஅளவை தொடர்பான நிரந்தர பதிவேடுகளை ———— பாதுகாப்பில் வைக்க வேண்டும்.

(A) Tahsildar
வட்டாட்சியர்

(B) Zonal Deputy Tahsildar
மண்டல துணை வட்டாட்சியர்

(C) Assistant Director
உதவி இயக்குநர்

(D) District Revenue Officer
மாவட்ட வருவாய் அலுவலர்

69. The third type of survey error is called ————.

நில அளவை பிழைகளில் மூன்றாம் வகை பிழை ———— ஆகும்.

(A) Angle error
கோண பிழை

(B) Measurement error
அளவு பிழை

(C) Area error
பரப்பு பிழை

(D) Offset error
குத்தளவு பிழை

70. The difference between apparent (sun) and mean time is called as ————.

சூரியன் உதய நேரத்திற்கும் இடைநிலை சராசரி நேரத்திற்கும் உள்ள வித்தியாசம் ———— என அழைக்கப்படும்.

(A) Refraction
ரெப்ரேக்ஷன்

(B) Parallax
பேரலாக்ஸ்

(C) Equation of time
ஈக்குவேசன் ஆப் டைம்

(D) Zenith
வானுச்ச புள்ளி

71. The size of class II field stones

இரண்டாம் தர புல எல்லை கற்களின் அளவு

(A) 90 c.m × 30 c.m × 45.0 c.m
90 செ.மீ × 30 செ.மீ × 45.0 செ.மீ

(B) 30 c.m × 7.5 c.m × 7.5 c.m
30 செ.மீ × 7.5 செ.மீ × 7.5 செ.மீ

(C) 80 c.m × 20 c.m × 22.5 c.m
80 செ.மீ × 20 செ.மீ × 22.5 செ.மீ

(D) 60 c.m × 15 c.m × 15 c.m
60 செ.மீ × 15 செ.மீ × 15 செ.மீ

72. Assistant Director of Survey should inspect minimum of ———— fields in a month.
நிலஅளவை உதவி இயக்குநர் ஒரு மாதத்திற்கு குறைந்தபட்சம் ———— புலத்தணிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

(A) 5
(B) 10
(C) 15
(D) 20

73. The subdivisions in town fields are measured by ————.
நகரங்களில் உட்பிரிவு அளவைகள் ———— ஆல் மேற்கொள்ளப்படுகிறது.

(A) Deputy Inspector of survey
வட்ட துணை ஆய்வாளர்
(B) Senior Draftsman
முதுநிலை வரைவாளர்
(C) Town Sub Inspector of Survey
நகர சார் ஆய்வாளர்
(D) Land Records Draftsman
வட்ட ஆவண வரைவாளர்

74. When the lands are converted from double crop to single crop subdivisions should be made only if the area involved is
இரு சாகுபடியிலிருந்து ஒரு சாகுபடி நஞ்சைக்கு மாற்றப்படும்பொழுது தொடர்புடைய பரப்பு ஒரு ஏக்கருக்கு ———— குறையாமலிருந்தால் மட்டுமே உட்பிரிவு செய்யப்படவேண்டும்.

(A) Above 50 ares
50 ஏர்ஸ்க்கு மேல்
(B) 100 ares
100 ஏர்ஸ்
(C) Not less than 40 ares
40 ஏர்ஸ்க்கு கீழ்
(D) Above 1 hectare
1 ஹெக்டருக்கு மேல்

75. The office of the Joint Director of Survey and Land Records, Chennai will be inspected by the ———— annually.
வருடத்திற்கு ஒரு முறை ———— அவர்களால் சென்னை மத்திய நிலஅளவை அலுவலகத்தில் ஆய்வு மேற்கொள்ளப்படும்.

(A) Additional Director of Survey
நிலஅளவை கூடுதல் இயக்குநர்
(B) Regional Deputy Director of Survey
நிலஅளவை மண்டல துணை இயக்குநர்
(C) Technical Manager
தொழில்நுட்ப மேலாளர்
(D) Director of Survey and Settlement
இயக்குநர் நிலஅளவை மற்றும் நிலவரித்திட்டம்

76. The process of demarcating field boundary in villages and fixing of stones are called as ————.
கிராமப்புறங்களில் புல எல்லைகள் நிர்ணயம் செய்து கற்கள் நடும் பணிக்கு ———— என்று பெயர்.

(A) 'E' process
'E' செய்முறை

(B) 'F' process
'F' செய்முறை

(C) 'B' process
'B' செய்முறை

(D) 'H' process
'H' செய்முறை

77. ——— command change the zoom scale mode to variable scale mode in collabland software.
———— என்ற கட்டளையை பயன்படுத்தி கொலாப்லேண்ட் மென்பொருளில் ஜூம் ஸ்கேல் முறைக்கு மாற்றம் செய்யலாம்.

(A) Zoom scale
ஜூம் ஸ்கேல்

(B) Double scale
டபுல் ஸ்கேல்

(C) Half scale
ஆப் ஸ்கேல்

(D) Variable scale
வேரியபுல் ஸ்கேல்

78. ———— is used to check the number of chains measured.
அளவிடப்பட்ட சங்கிலியின் எண்ணிக்கையை சரிபார்க்க ———— பயன்படுத்தப்படுகிறது.

(A) Tape
டேப்

(B) Theodolite
தியோடலைட்

(C) Offset Pole
ஆப்செட் போல்

(D) Arrows
ஊசிகள்

79. Fields drawn independently with sub divisions and important details are termed as
புலங்களின் உட்பிரிவுகள் மற்றும் விளக்கிகள் கொண்டு தனித்தனியாக வரையப்படும் வரைபடம் ———— என அழைக்கப்படுகிறது.

(A) FMB
எப்.எம்.பி.

(B) Chitta
சிட்டா

(C) A Register
அ பதிவேடு

(D) Tie Line
டை லைன்

80. A sidereal day is divided into

ஒரு பக்கவாட்டு நாள் ———————— நேரங்களாக பிரிக்கப்பட்டுள்ளது.

(A) 24 hours
24 மணி

(B) 12 hours
12 மணி

(C) 48 hours
48 மணி

(D) 6 hours
6 மணி

81. Uses of Tie Line in ————

டைலைன் ————————ல் பயன்படுகிறது.

(A) C.S.M (B)
சி.எஸ்.எம்.பி.

(B) 90 × 22.5 × 22.5
90 × 22.5 × 22.5

(C) Town Survey
நகர அளவை

(D) WGS 84
WGS 84

82. Khandam should be numbered consecutively beginning at the ——— corner of the village.

கண்டம் ஆனது கிராமத்தின் ———————— மூலையிலிருந்து தொடர் எண் வரிசைப்படுத்தப்பட வேண்டும்

(A) North east
வட கிழக்கு

(B) South west
தென் மேற்கு

(C) North west
வட மேற்கு

(D) South east
தென் கிழக்கு

83. Field sketches drawn to a scale of fraction 1:1000, 1:2000, 1:5000 is termed as

பின்னத்தில் 1:1000, 1:2000, 1:5000 என்ற பின்னமாக அளவுகளில் வரையப்படும் புல வரைபடங்கள் ———————— என அழைக்கப்படுகிறது.

(A) Representative Fraction
பிரதிநிதித்துவ பின்னம்

(B) Co-ordinates
அச்சுதூரங்கள்

(C) Fraction
பின்னம்

(D) Decimal
டெசிமல்

84. 100 Cents

100 செண்ட்

(A) 2 Acre
2 ஏக்கர்

(B) 3 Acre
3 ஏக்கர்

(C) 4 Acre
4 ஏக்கர்

(D) 1 Acre
1 ஏக்கர்

85. Block maps are also called as ————.

பிளாக் வரைபடங்கள் ———————— எனவும் அழைக்கப்படுகிறது.

(A) FMB
எப்.எம்.பி.

(B) Atlas
அட்லாஸ்

(C) Village map
கிராம வரைபடம்

(D) Taluk map
வட்ட வரைபடம்

86. The main circuit traverse should be connected with the ———— in Traverse Survey.

டிராவர்ஸ் அளவையில் பெருஞ்சுற்று அளவுகள் ———————— உடன் இணைக்கப்படுகிறது.

(A) ETS
ஈ.டி.எஸ்

(B) GPS
ஜி.பி.எஸ்

(C) G.C.P
ஜி.சி.பி.

(D) G.T. Station
ஜி.டி. ஸ்டேசன்

87. Demarcating the village boundary is departmentally known as ————.

கிராம எல்லை நிர்ணயம் செய்யப்படுவதை துறை ரீதியாக ———————— என்று அழைக்கப்படுகிறது.

(A) B work
B பணி

(B) D work
D பணி

(C) A work
A பணி

(D) C work
C பணி

88. The field sketches drawn in collabland software can be stored in computer using ———— menu.
கொலாப்லேண்ட் மென்பொருள் மூலம் வரைவு செய்த புலப்படத்தை கணினியில் பதிவு செய்ய ———— என்ற மெனு பயன்படுத்தப்படுகிறது.

(A) Exit
எக்சிட்

(B) Paste
பேஸ்ட்

(C) Save
சேவ்

(D) Open
ஓபன்

89. Application received to point out the boundaries of the fields are entered in ————..
புல எல்லை அளவு குறித்து பெறப்படும் மனுக்கள் ———— பதிவேட்டில் பதியப்படுகிறது

(A) 8A register
8A பதிவேடு

(B) Copy application register
நகல் மனு பதிவேடு

(C) F-line register
புல எல்லை பதிவேடு

(D) Aquitence register
அறிதல் பதிவேடு

90. In a village, newly formed field should be in continuation of ———— survey number.
ஒரு கிராமத்தில் புதிதாக உருவாக்கப்படும் புலத்திற்கு அந்த கிராமத்தின் ———— புல எண்ணிற்கு அடுத்த புல எண் வழங்கப்பட வேண்டும்.

(A) Alphabetic
அகர

(B) First
முதல்

(C) Even number
சம எண்

(D) Last
கடைசி

91. A maintenance field surveyor will generally be in-charge of a ————.
பராமரிப்பு நிலஅளவரின் பொறுப்பு பொதுவாக ———— குட்பட்டதாக இருக்கும்.

(A) Taluk
வட்டம்

(B) District
மாவட்டம்

(C) Firka
பிர்கா

(D) State
மாநிலம்

92. ———— is measured westwards from meridian planes.
மெரிடியன் தளத்திற்கு மேற்கு நோக்கியே ———————— அமைக்கப்படுகிறது.

(A) Meridians
மெரிடியன்

(B) Azimuth
அசிமத்

(C) Traverse
டிராவர்ஸ்

(D) Zenith
வானுச்சபுள்ளி

93. The square Root of 484 is ————
484ன் வர்க்கமூலம்

(A) 22

(B) 32

(C) 12

(D) 26

94. The chain used in cadastral town and street survey is ————.
நகர அளவை மற்றும் தெரு அளவைக்கு பயன்படுத்தப்படும் சங்கிலியின் அளவு

(A) 100 meter
100 மீட்டர்

(B) 200 meter
200 மீட்டர்

(C) 20 meter
20 மீட்டர்

(D) 50 meter
50 மீட்டர்

95. How many distinct stages are there in all land acquisition?
நில எடுப்பு மேற்கொள்ளும்போது எத்தனை வித்தியாசமான நிலைகள் உள்ளன?

(A) 2

(B) 8

(C) 16

(D) 4

96. In a closed circuit if 'n' is 9 the total angle is?
சுற்றின் 'n' மதிப்பு 9 என்றால் மொத்த கோணத்தின் மதிப்பு?

(A) 1260

(B) 1220

(C) 1280

(D) 1240

97. ——— is an instrument used for preparing FMB.
எப்.எம்.பி தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் கருவி —————.

(A) Diagonal Scale
மூலைவிட்ட அளவுகோல்

(B) Vernier scale
வெர்னியர் அளவு கோல்

(C) Parallel scale
பேரலல் ஸ்கேல்

(D) Offset scale
ஆப்செட் ஸ்கேல்

98. In traverse plotting the sum of the eastings must be equal to the sum of the ———.
டிராவர்ஸ் வரைவு மேற்கொள்ளும்போது கிழக்கு பகுதிகளின் கூடுதல் —————க்கு சமமாக இருக்க வேண்டும்.

(A) Southings
தெற்கு பகுதி

(B) Northings
வடக்கு பகுதி

(C) Westings
மேற்கு பகுதி

(D) Centerings
மத்திய பகுதி

99. The approximate area extent allowed for formation of Khandam boundaries are ———.
கண்டம் எல்லைகள் அமைக்கும்போது தோராயமாக ————— அளவு பரப்பளவில் அமைக்கப்படும்

(A) 80 –160 hectares
80 –160 ஹெக்டேர்ஸ்

(B) 40 – 80 hectares
40 – 80 ஹெக்டேர்ஸ்

(C) 160 –320 hectares
160 –320 ஹெக்டேர்ஸ்

(D) 320 – 640 hectares
320 – 640 ஹெக்டேர்ஸ்

100. In collabland software ——— option helps the users to delete all unused points for maps created from total station points.
கொலாப்லேண்ட் மென்பொருளை பயன்படுத்துபவர் டோட்டல் ஸ்டேசன் மூலம் தயாரிக்கப்பட்ட வரைபடத்திலிருந்து ————— கட்டளையை பயன்படுத்தி பயன்பாட்டிற்காகாத புள்ளிகளை வரைபடத்திலிருந்து நீக்கம் செய்யலாம்.

(A) Un-Used Points
அன் யூசுடு பாயின்ஸ்

(B) Line
லைன்

(C) Modify Text
மாடிபை டெக்ஸ்ட்

(D) Modify Length
மாடிபை லெனத்